**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG20 – நிலை II – (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)
**ஜனவரி–பிப்ரவரி 2021**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. இராமலிங்க அடிகள் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
2. நாலடியாருக்கு வழங்கும் வேறு பெயர் யாது?
3. பழமொழி என்னும் நீதிநூலை இயற்றியவர் யார்?
4. இராமனுடைய சிற்றன்னையின் பெயர் என்ன?
5. விக்கிரம சோழனின் மகன் யார்?
6. கிராமங்களில் வாழும் மக்கள் யார்?
7. நாவுக்கரசரின் தமக்கையின் பெயர் என்ன?
8. மரகதவர்மன் எந்த நாட்டை ஆண்டு வந்தார்?
9. இந்தியாவின் தந்தை என்று போற்றப் பெறுபவர் யார்?
10. செய்யுள் வடிவில் தமிழில் தோன்றிய நாடக நூல் எது?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. அறிமடமும் சான்றோர்க்கு அணியாவது யாங்ஙனம்?
2. மூவருலாவின் பாட்டுடைத் தலைவர்கள் யாவர்?
3. குலோத்துங்கச் சோழன் பெற்ற சிறப்புப் பெயர்கள் யாவை?
4. பாரதியார் எப்பொழுது பிறந்தார்?
5. இந்த உலகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?
6. நாட்டுப்புறப்பாடல்கள் எவ்வாறு அழைக்கப்பெறுகின்றன?
7. வாழ்க்கையாகிய கடலைக் கடக்க எவை எவை தேவைப்படுகின்றன?
8. தாமரைக் குளம் ஓவியம் குறித்து எழுதுக.
9. பறக்கும் தொடர் வண்டி என்பது என்ன?
10. குழந்தை தடுமாறி விழுந்து கிடப்பதைப் போல எது இருந்தது?

11. தொழிற்பெயரின் இரு நிலைகளைக் கூறுக.
12. இரண்டு உயிர்களை உடன் படுத்துவது எது?
13. ஆசிரியப்பாவுக்கு உரிய ஓசை எது?
14. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?
15. புறத்திணை எத்தனை வகைப்படும்?

**பகுதி – இ**

**III.** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. சிறுபொழுது ஆறினை எழுதுக.
2. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
3. பெரியாரைப் பற்றி திரு.வி.க.வின் கருத்து யாது?
4. குலசேகராழ்வார் திருவேங்கட திருமாலிடம் உரைப்பன யாவை?
5. தேவாரம் – குறிப்பு வரைக.
6. நாட்டுப்புறப் பாடலில் கொடுக்கப்பட்ட தாலாட்டுப் பாடலின் மையக்கருத்தை எழுதுக.
7. கலிங்கத்துப் பரணியின் பாடல் கருத்துகளை எழுதுக.
8. உலக வாழ்வு என்னும் பாடலில் கவியரசு கண்ணதாசன் குறிப்பிடும் கருத்துகளை எழுதுக.

**பகுதி – ஈ**

**IV.** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. புறத்திணைகள் 12 எழுதி விளக்குக.
2. இருவகைப் பொழுதையும் தமிழ் மாதங்களையும் ஐந்திணைகளையும் எழுதுக.
3. பகுத்தறிவுப் பகலவன் பெரியார் குறித்து செய்திகளை எழுதுக.

**பகுதி – உ**

**V.** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. தொடர் வண்டி குறித்த செய்திகளை உம் பாடத்தின் வழி விளக்குக.
2. சார்பெழுத்துகள் எத்தனை? அதன் வகைகளை எழுதி ஏதேனும் ஐந்தை விவரிக்க.

******